# சுருட்டுவாள் கதையில் தொன்மங்கள்

***ஸை. சந்தியாமோள்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7907

***முன்னுரை***

*உலகம் முழுவதும் எல்லா சமூகங்களிலும் மக்கள் தங்கள் வாழ்க்கை மூலம் அடைந்த அறிதல்களை நம்பிக்கைகள், சடங்குகள், ஆசாரங்கள், கதைகள் வடிவில் புனைவு மூலம் சொல்வதே தொன்மம் ஆகும், பொதுவாக தொன்மக் கதைகளில் மீவயற்காக நிகழ்வுகள் இருக்கும் பல்வேறு கற்பனை உயிரினங்களும், சூழ்நிலைகளும், நிகழ்ச்சிகளும் செயல்களும் இருக்கும். குறிப்பாக இயற்கை நிகழ்வுகள் அல்லது பழங்கால மக்களின் வரலாறு பற்றிய பழங்கதைகளை தொன்மம் என்று கருதுகிறோம். "உக்கிலு" கதையில் தொன்மம் என்பது ஒரு தொகுப்பாக அமைந்து காணப்படுகின்றது. அது இனத்தை ஓட்டியும், இனத்தின் வரலாற்றை ஓட்டியும், இனத்தின் அழிவு பற்றியும், இனத்தின் இடம்பெயர்வை ஓட்டியும் கதையில் இடம் பெறுகிறது. உணர்வு, செயல், வாழ்வின் முழுமை இவற்றை ஒழுங்கிணைந்து இத்தொன்மம் இயக்கம் கொள்வதை கதையின் வாயிலாக அறிந்துக் கொள்ளலாம்.*

## "உக்கிலு"-கதைத் தொகுப்பு

குமாரசெல்வா எழுதிய "உக்கிலு" சிறுகதைத் தொகுப்பு 1992-ஆம் ஆண்டு காலச்சுவடு பதிப்பாக வெளிவந்துள்ளது. இத்தொகுப்பில் உக்கிலு, சீடைகள், சுருட்டுகள், ஈஸ்டர் கோழி, காறாட்டம், நிரந்தரமற்ற மரணங்கள் என்று ஆறு கதைகள் இடம்பெற்றுள்ளன.

"உக்கிலு" என்னும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் கதை மாந்தர்களில் பெரும்பாலானவர்கள் விளிம்புநிலை மக்கள் சாமானியர்களான இந்த மக்கள் புராதன காலந்தொட்டு நவீன காலம் வரையில் இயக்கங் கொள்பவர்களாக கதைகளில் திகழ்கிறார்கள். தனித்துவமும் ஆளுமையும் கொண்ட மனிதர்கள் சிதைக்கப்படுகின்றனர். கழுவில் ஏற்றிக் கொல்லப்பட்ட உயிர்களும், நாக்கறுத்தல், உடல் உறுப்புகளைச் சிதைத்தல் போன்ற சித்திரவதைகளால் கொல்லப்பட்ட உயிர்கள் சிதையும்போது அதற்கெதிரானக் குரலை வரலாற்றில் நிகழ்ந்துவிட்ட குரூரங்களுக்கு எதிரான பாதையில் குமாரசெல்வா தனது கதைகளில் பதிவு செய்கிறார் என்கிறார் அழகேசன்.

வரலாற்றில் என்றோ நிகழ்ந்துவிட்ட அசைவை புதிய வலிமையுடனும் புத்தாக்கத்துடனும் குமாரசெல்வா திருத்தி அமைக்கிறார் என்று இதனை எடுத்துக் கொள்ளலாம்.

அந்த வகையில் இவரது கதைகள் மிகச்சிறந்த வரலாற்று பங்களிப்பை செய்கின்றன எனலாம். மட்டுமல்ல மனித உயிர்களோடு இயற்கையின் பல்லுயிர் தன்மைகளும் இக்கதைகளின் வாயிலாக பாதுகாக்கப்படுகின்றன.

உக்கிலு கதை Magical Realism ஒருவித சார்ந்தது. சாத்தன் என்ற Mythical கதை சொல்பவனாய் வெவ்வேறு ரூபங்களில் வெளிப்படும் அபாரமானக் கதை. குமரிமாவட்டம் இன்னும் மலையாள ராஜாக்களையும், அம்மன்களையும், பனையேறிகளையும் கொண்ட மறக்க முடியாத மாவட்டம். இக்கதைகளில் அந்த அழககை -கள் தொடர்கின்றன என்பதாக தமிழவன் இச்சிறுகதை தொகுப்பின் சிறப்புகளாக குறிப்பிடுகிறர். மேலும், இந்துச் சடங்குகளை ஒரு இந்துவைப் போலவும், கிறித்தவ வாழ்க்கை முறைகளை ஒரு கிறித்துவனைப் போலவும் எழுதுகிறார் என்றும் அவர் கூறியள்ளார்.

### “சுருட்டுவாள்” கதையின் தொன்மங்கள்

“உக்கிலு” கதையைப் போலவே தொன்மம் நிறைந்த மற்றொரு கதை “சுருட்டுவாள்” ஆகும். இதில் ராஜன் என்று பெயர் கூட்டப்படும் இளைஞன் ஒருவன் ஆசான் என்று குறிக்கப்படும் ஐயாவு நாடாரிடம் சுருட்டுவாள் ஒன்று கேட்டு கடைசி வரையில் அது கிடைக்காமல் முடிவடைகிறது

### கதை

ராஜன் ஆசானிடம் சுருட்டுவாள் கேட்டதற்கு பக்கத்து வீட்டுக்காரர் எதிரி காரணமாக இருக்கிறார். ஒருவகையில் ஆசானுக்கும் ராஜனுக்கும் நட்பு ஏற்படக் காரணமாக அமைந்ததே பக்கத்து வீட்டுக் காரருக்கு இடையிலான சண்டைதான். வீட்டிற்கு மின்சாரம் வந்தபோது வீடு தாண்டி மின்கம்பி இழுப்பதில் ஏற்பட்ட தகராறு முதலில் வாய்ப்பேச்சில் தொடங்கிய சண்டை ஒருவரை ஒருவர் அடிப்பதற்கு சவாலின் தூள் பறந்தது.

பக்கத்து வீட்டுக்காரன் மிகவும் நோஞ்சன் தடியனை தன்னை சவாலுக்கு இழுத்ததும் கோபம் உண்டாகி அடிக்கப்பாய்ந்தான். அப்போது வெற்றிலைக் கொடிக்கு தண்ணீர் விடுவதற்காகச் சென்ற வறுவேல் ஓடிவந்து தடுத்தான். அவன் தான் அணிந்திருந்த துணிக்குள்ளாக கோமாளி என்ற ஆயுதத்தை மறைத்து வைத்திருப்பதற்காகக் கூறினான். கோமாளி என்பது மாட்டின் வயிற்றுப்பாகத்தில் உள்ள எலும்பால் செய்யப்பட்ட ஒரு ஆயுதம். அது உடம்பில் பட்டால் அந்த இடம் புழுக்கும். எனவே தான் பக்கத்து வீட்டுக்காரன் நோஞ்சானாக இருந்தும் தன்னுடன் சாவலுக்கு தைரியமாக வருகிறான் என்பதை ராஜன் உணர்ந்து கொள்கிறான்.

கதைப் போக்கில் ஆசானிடம் சுருட்டுவாள் கேட்டு வாங்கும் நிர்பந்தத்திற்கு ராஜனைத் தள்ளியது ஓர் உடனடி சம்பவமாகும். ஒருநாள் விளக்கு கைக்கப் போகிற நேரம் பக்கத்து வீட்டுகாரனின் முற்றத்தைத் தாண்டி வரும்போது வீட்டுக்குள் இருந்து யாரோ நாயை உசுப்பி கடிக்கத் தூண்டினார்கள். ராஜன் தன்மேல் கடிக்கப் பாய்நதநாயை கல்லால் எறிந்து விரட்டினான். இதுவரையிலும் ஒளிந்திருந்து சம்பவத்தை நடத்திய பக்கத்து வீட்டுக் காரனின் மனைவி இப்போது நேரடியாகத் தோன்றி அவனுடன் சண்டைப் போட்டான்.

அன்றிரவு வீட்டுக்கு வந்த பக்கத்து வீட்டுக் காரன் ராஜன் வீட்டில் கல்லெறிந்து தகராறு செய்தான். மறுநாள் ஆசானை தேடிப் போய் சுருட்டுவாளின் அவசியம் குறித்து உரையாடினான். அவரும் கேரளத்தில் ஒருவனிடம் இருப்பதாக கூறி அதை வாங்க செல்வதற்கு உரிய பணத்தை விற்று அந்தப் பணத்தால் குடித்து வெறித்து ராஜனை ஏமாற்றி கொண்டேயிலுந்தார். இந்த நிலையில் பக்கத்து வீட்டுக்காரனை ஆள் வைத்து அடித்த ராஜன் அவனுடைய மரணத்திற்கும் காரணமாகிறான். அவன் மரிக்கும் போது ராஜனை அழைத்து

சினேகமாயிந்தான் இறந்தபிறகு அடக்கி புதைகுழியில் மண்வாரிப் போடும்போது தான் கொண்டு திரிந்த கோமரிணையும், திரைச்சி வரையும் வடக்குப்புரையில் வச்சிருக்கிற எல்லா ஆயுதங்களையும் நீதான் போடணும் என்ற உறுதியும் வாங்குகிறார்.

"சுருட்டுவாள்" கதையில் சுருட்டுவாள் எனும் தொன்மம் பற்றி வரும்பகுதி நனவிலி நிலையில் ராஜன் வாயிலாக ஆசானால் உரையாடப்படுகிறது. இது கதையின் உத்தியாக இருந்தாலும் தொன்மத்தை உடைத்து வெளிப்படுத்தும் கதைச் சொல்லியின் படைப்பாகவும் சிறப்பாக வெளிப்படுகிறது.

ஒருநாள் ராஜன் உடம்பறையில் படுத்துக் கொண்டிருக்கும் போது தூரத்தில் தெரியும் மாடத்தின் வழியே ஆசான் நின்று கொண்டிருப்பது போல அவனுக்குத் தெரிகிறது. அவரை நோக்கி ஓடிச் செல்பவன் வரப்புகளில் விழுந்து எழும்பியது கூட பொருட்படுத்தாமல் மாடத்தில் வந்து நின்று மூச்சிரைக்கிறான். அப்போது ஓரிடத்தில் நல்ல சுருட்டுவாள் ஒன்று இருப்பதாக அவனிடம் ஆசான் கூறுகிறான். இந்த இடத்தில் சுருட்டுவாள் என்னும் தொன்மம் வெளிப்படுகிறது.

வலிய ஆசானின் தகப்பனார் பனை ஏறும்போது துர்க்கதேவி என்னும் தூர்தேவதையின் தொந்தரவு இருந்து வந்ததாம். திடீரென்று அவர் தீயாய் மாறி பனைவரை எழும்பி அணைக்க வருவாள். பனை ஏறி கொண்டு வரும் அக்கானியைக் காஞ்சாடியில் ஊற்றும் போது மூத்திரமாக நாறுமாம். இந்த சாபத்தில் இருந்து மீளுவதற்காக பனைமரத்தில் இந்த சுருட்டுவாளை காளி தேவி மறைத்து வைத்து ஆணுக்கு கொடுத்தாக தொன்மம் கூறப்படுகிறது.

தகப்பன் பனையேறி இறந்த பிறகு அதனை மகன் பனையேறி கொண்டு திரிந்தான். அப்போது திருவட்டாறு பக்கம் காஞ்சனி என்கிற நாயர் பெண்ணுடன் தொடர்பு உண்டாகி ஆசையுற்று ஏங்குவாள் சீத்தா. அவளுக்கு ஒழுங்கற்றவைகளில் ஆர்வமும் விருப்பமும் இருந்து வந்தது. பாம்பு இக்கதையில் ஒழுங்கற்றதன் குறியீடாக சுட்டப்படுகிறது.

குழந்தைப் பாக்கியம் இல்லாத சீத்தா ஒருநாள் கனவு காண்கிறாள். குளியலறையில் நின்று குளிக்கும் போது அவளுடம்பை ஒரு பாம்பு சுற்றித் தழுவுகிறது. அதன் கதகதப்பு அவளை பரவசப்படுத்துகிறது. தன்னை மறந்து அதனை உள்வாங்கி லயிக்கிறாள். இந்த கனவைக் கண்டதற்கு பிறகு சீத்தா கர்ப்பம் தரிக்கிறாள். தனது வயிற்றில் இருப்பது பாம்பு என்றும் தான் ஒரு பாம்பைப் பிரசவிக்கப் போவதாகவும் ஊராரிடம் தெரியப்படுத்துகிறாள்.

சில நாட்களில் அவளுக்கு குழந்தையும் பிறக்கிறது. ஒரு நாள் கணவனுக்குப் பக்கத்தில் குழந்தையுடன் படுத்துக் கிடக்கும்போது ஒரு பாம்பு வந்து அவனது மார்பில் பால் குடிக்கிறது. உடனே அதனைக் கண்டு அந்தப் பாம்பை கொல்லும் முயற்சியில் அவனது கணவன் இறங்குகிறான். ஊர்மக்களை அழைத்து வந்து பாம்பை அடிக்கும் போது சீத்தா அவனைத் தடுக்கிறாள். அவளது வாய் துடித்துடிப்பில் இயங்குகிறது. பாம்பை அடிக்க வேண்டாம் என்று வாய்திறந்து உரத்தக் குரலில் சத்தமிடுவதை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நிற்க பாம்பு பால் பாலாக வழிந்துப் போகிறது.

இக்கதை தாழ்த்தப்பட்ட குழந்தைப் பேறு பெறும் ஆதிக்கச்சாதியை சேர்ந்த ஒரு பெண்ணின் சாதி மீறிய கலப்பை உள்ளடக்கமாகக் கொண்டு திரிகிறது. இருந்தாலும் கதையை அப்படியே தனது உரையில் முன்வைக்காத படைப்பாளி நாட்டுப்புற கதை மரபில் பாம்பு வடிவில் தொன்மநிலையில் அதனை வெளிப்படுத்துகிறார்.

### முடிவுரை

தொன்மம் என்பது இக்கதைகளில் பெரும்பாலும் நாட்டுப்புற மரபுகளில் இருந்து பெறப்பட்ட கதை வடிவத்தின் வாயிலாகவே காணப்படுகிறது. இதனை குறிப்பிட்டு சொல்வதற்கு உரிய காரணங்கள் உண்டு. தமிழில் கிரேக்கம் மற்றும் புராணவியல் வடிவங்களில் இருந்து தொன்மத்தை பல எழுத்தாளர்கள் தங்களது கதைப்படைப்பின் முயற்சிகளுக்கு உள்ளாக மாற்றும் போது குமாரசெல்வா தனது கதைகளில் நாட்டுப்புற மரபைச் சார்ந்தே தொன்மங்களை எழுத்தாள்கிறார். அவை பெரும்பாலும் மக்கள் வழக்குச் சார்ந்த கிராமத்துக் கதைச் சொல்லிகளால் பேசப்பட்ட தொன்மங்களாகவும் அவை சார்ந்த நிலவியல் படிமங்களாகவும் காணப்படுகிறது.

### பார்வை நூல்கள்

1. உக்கிலு - குமாரசெல்வா, 1992, காலச்சுவடு பதிப்பகம், கே.பி. சாலை, நாகர்கோயில்.
2. குமாரசெல்வா - எஸ்.எஸ். ஷீபா, 2015, கலைகள் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை.
3. நாட்டுப்புறவியல் ஆய்வு - ஆறு இராமநாதன், 1991, கே.பி.டி. இன்டஸ்டிரீஸ், முறைகள் அண்ணாமலைநகர்.
4. நாட்டுப்புற இலக்கியம் - க.கிருட்டினசாமி, மூன்றாம்பதிப்பு-2015,சீதைபதிப்பகம், ஓர் ஆய்வு 4ஃ7 ராஜா அனுமந்தா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.